# *லெந்து கால ஆராதனை முறைமை*

# ORDER OF SERVICE FOR SEASON OF LENT

**ஆயத்தம்**

*தலைவர்:* கர்த்தர் உங்களோடு இருப்பாராக,
*எல்லாரும்:* **அவர் உம்மோடும் இருப்பாராக,**

1.இயேசு வனாத்திரத்திலே உபவாசித்தும், ஜெபித்தும், பிதாவின் சித்தத்தை நாடுகிறார்.
**கர்த்தாவே, நாங்கள் உம்மோடு வருகிறோம். எங்களை உம்மோடு வைத்துக்கொள்ளும்.**

2.தேவனுக்கேற்கும் பலிகள் நொருங்குண்ட ஆவிதான்.நொருங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர். சங்கீதம் 51:17.
**கர்த்தாவே, எங்களுக்கு இரங்கும். நாங்கள் பாவிகள்.**

3.எங்கள் தேவனாகிய ஆண்டவரிடத்தில் இரக்கங்களும், மன்னிப்புகளும் உண்டு என்ற போதிலும் அவருக்கு விரோதமாக நாங்கள் கலகம் பண்ணினோம். தானியேல் 9:9.
**கர்த்தாவே, எங்களுக்கு இரங்கும். நாங்கள் பாவிகள்.**

4.நான் எழுந்து என் தகப்பனிடத்திற்குப் போய் தகப்பனே பரத்துக்கு விரோதமாகவும் உமக்கு முன்பாகவும் பாவஞ் செய்தேன். இனிமேல் உமது குமாரன் என்று சொல்லப்படுவதற்கு நான் பாத்திரன் அல்ல என்று சொன்னான். லூக்கா 15:21.
**கர்த்தாவே, எங்களுக்கு இரங்கும். நாங்கள் பாவிகள்.**

3.ஜெபம் பண்ணக்கடவோம். (முழங்கால் படியிடவும்).

**எல்லா இருதயங்களையும், எல்லா விருப்பங்களையும், எல்லா இரகசியங்களையும் அறிந்திருக்கிற சர்வ வல்லமையுள்ள தேவனே நாங்கள் தேவரீடத்தில் பரிபூரணமாய் அன்பு கூரவும் உமது பரிசுத்த நாமத்தை உத்தமமாய் மகிமைப்படுத்தவும், எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிமித்தம் உமது பரிசுத்த ஆவியின் ஏவுதலால் எங்கள் இருதயத்தின் சிந்தனைகளைச் சுத்தம் பண்ணியருளும். ஆமென்.**

**4. கட்டளைகள்**

*தலைவர்:* நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கூறினதாவது. நீங்கள் என்னில் அன்புகூர்ந்தால் என் கட்டளைகளைக் கைக்கொள்ளுங்கள். கடவுளுடைய வார்த்தைகளைக் கேட்டு அவைகளை கைக்கொள்ளுகிறவர்களே பாக்கியவான்கள். ஆகவே, கடவுள் ஜனத்திற்குக் கொடுத்த கட்டளைகளைக் கேட்டு அவற்றை இருதயத்தில் கொள்ளுங்கள்.உன் தேவனாகிய கர்த்தர் நானே. என்னை அன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம். நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் உன் முழுப் பலத்தோடும் அன்பு கூருவாயாக.
**சபையார் : ஆமென். ஆண்டவரே எங்களுக்கு இரங்கும்.**

*தலைவர்:* நீ உனக்கு எவ்விதமான விக்கிரகத்தையும் உண்டாக்க வேண்டாம். கடவுள் ஆவியாகவே இருக்கிறார். அவரை தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரை தொழுதுகொள்ளவேண்டும்.
**சபையார்: ஆமென், ஆண்டவரே, எங்களுக்கு இரங்கும்.**

*தலைவர்:* நீ உன் தேனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக. நீ பக்திவினயத்தோடு ஆராதிப்பாயாக.
**சபையார் : ஆமென், ஆண்டவரே, எங்களுக்கு இரங்கும்.**

*தலைவர்:* நீ உன் ஆண்டவருடைய நாளை நினைவு கூர்ந்து அதைப் பரிசுத்தமாய் ஆசரிப்பாயாக. கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்தார். பூமிக்குரியவைகளையல்ல மேலானவைகளையே நாடுங்கள்.
**சபையார் : ஆமென், ஆண்டவரே, எங்களுக்கு இரங்கும்.**

*தலைவர்:* நீ உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக. கடவுளுடைய பணிவிடைக்காரராய் ஜீவியுங்கள். எல்லாரையும் கனம் பண்ணுங்கள். சகோதர ஐக்கியத்தை விரும்புங்கள்.
**சபையார் : ஆமென், ஆண்டவரே , எங்களுக்கு இரங்கும்.**

*தலைவர்:* கொலை செய்யாதிருப்பாயாக. உன்னுடைய சகோதரனுக்கு விரோதமாக கோபத்தை வளர்க்காதிருப்பாயாக. தீமையை நன்மையினால் வெல்லு.

**சபையார் : ஆமென், ஆண்டவரே, எங்களுக்கு இரங்கும்.**

*தலைவர்:* விபச்சாரம் செய்யாதிருப்பாயாக . உங்களுடைய சரீரம் பரிசுத்த ஆவியின் ஆலயம் என்று அறியுங்கள்.
**சபையார் : ஆமென், ஆண்டவரே, எங்களுக்கு இரங்கும்.**

*தலைவர்:* களவு செய்யாதிருப்பாயாக .நீங்கள் நேர்மையுடன் வேலை செய்து தேவைபடுகிறவர்களுக்கு உதவுங்கள்.
**சபையார் : ஆமென், ஆண்டவரே, எங்களுக்கு இரங்கும்.**

*தலைவர்:* பொய்ச் சாட்சி சொல்லாதிருப்பாயாக. யாவரும் உண்மையை பேசக்கடவர்.
**சபையார் : ஆமென், ஆண்டவரே, எங்களுக்கு இரங்கும்.**

*தலைவர்:* பிறர் பொருளை இச்சியாதிருப்பாயாக. இயேசு சொன்ன வார்த்தையை நினைவுகூருங்கள். வாங்குவதைப் பார்க்கிலும் கொடுப்பதே பாக்கியம். உன்னைப்போல் உன் சகோதரனை நேசி. அதுவே நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுவதாகும்.
**சபையார் : ஆமென், ஆண்டவரே, எங்களுக்கு இரங்கும்.**

**கர்த்தாவே எங்களுக்கு இரங்கும் X3**

**கிறிஸ்துவே எங்களுக்கு இரங்கும் X3**

**கர்த்தாவே எங்களுக்கு இரங்கும் X3**

### 5. லெந்து கால ஜெபம்

*சர்வ வல்லமையுள்ள நித்திய பராபரனே, தேவரீர் சிருஷ்டித்தவைகளில் ஒன்றையும் பகையாதவரும், தங்கள் பாவங்களினிமித்தம் மனஸ்தாபப்படுகிற யாவருக்கும் மன்னிக்கிறவருமாயிருக்கிறீர். எங்களுடைய பாவங்களைக் குறித்து நாங்கள் துக்கித்துப் புலம்பி, எங்கள் நிர்ப்பாக்கியத்தை அறிக்கையிட்டு சம்பூரண இரக்கமுள்ள தேவரீரிடத்தில் குறைவற்ற பாவ விமோசனத்தையும் மன்னிப்பையும் பெறத்தக்கதாக, எங்களுக்குள்ளே நொறுங்குண்ட புதிதான இருதயத்தைச் சிருஷ்டிக்க வேண்டுமென்று, எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.*

### 6. சுருக்க ஜெபம் (*பக்கம் 18-19 பார்க்கவும்*)

### 7. திருவசனப் போதனை

*வேத பாடம்*

பிரசங்கம்

### 8. அப்போஸ்தலர் விசுவாச பிரமாணம்.

வானத்தையும் பூமியையும் படைத்த சர்வ வல்லமையுள்ள பிதாவாகிய தேவனை விசுவாசிக்கின்றேன். அவருடைய ஒரே குமாரனாகிய நம்முடைய நாதர் இயேசு கிறிஸ்துவையும் விசுவாசிக்கின்றேன். அவர் பரிசுத்த ஆவியனாலே கன்னிமரியாளிடத்தில் உற்பவித்துப் பிறந்தார். பொந்தியு பிலாத்துவின் காலத்தில் பாடுபட்டு சிலுவையில் அறையுண்டு மரித்து அடக்கம்பண்ணப்பட்டு பாதாளத்தில் இறங்கினார். மூன்றாம் நாள் மரித்தோரிடத்திலிருந்து எழுந்தருளினார். பரமண்டலத்துக்கேறி சர்வ வல்லமையுள்ள பிதாவாகிய தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார். அவ்விடத்திலிருந்து உயிருள்ளோரையும் மரித்தோரையும் நியாயந்தீர்க்க வருவார். பரிசுத்த ஆவியையும் விசுவாசிக்கின்றேன் பொதுவாயிருக்கிற பரிசுத்த சபையும் பரிசுத்தவான்களுடைய ஐக்கியமும் பாவமன்னிப்பும் சரீரம் உயிர்த்தெழுதலும் நித்திய ஜீவனும் உண்டென்று விசுவாசிக்கின்றேன். ஆமென்.

### 9. லித்தானியா என்னும் பொதுவான பிரார்த்தனை

ஜெபம் பண்ணக்கடவோம்
1.
பிதாவாகிய கடவுளே
**எங்கள் மேல் இரக்கமாயிரும்**

குமாரனாகிய கடவுளே

**எங்கள் மேல் இரக்கமாயிரும்**

பரிசுத்த ஆவியாகிய கடவுளே
**எங்கள் மேல் இரக்கமாயிரும்**

பரிசுத்த திரியேக கடவுளே
**எங்கள் மேல் இரக்கமாயிரும்**

2.
சகல தீமையிலும் ஆபத்திலும் நின்றும் அகந்தையிலும் பெருமையிலும் மாயத்திலும் நின்றும் பொறாமையிலும் பகையிலும் வர்மத்திலும் நின்றும் சகல தீய எண்ணங்களினின்றும்.
**எங்களை இரட்சித்தருளும் தயவுள்ள கர்த்தாவே**

சோம்பலிலும் உலகப் பற்றிலும் பண ஆசையிலும் இருதயக் கடினத்திலும் நின்றும் உமது வசனத்தையும் கற்பனையும் அசட்டை பண்ணும் துணிவிலும் நின்றும்.
**எங்களை இரட்சித்தருளும் தயவுள்ள கர்த்தாவே**

சரீரத்தினாலும் மனதினாலும் செய்கிற பாவங்களினின்றும் உலகத்தினாலும் மாமிசத்தினாலும் பிசாசினாலும் வருகிற சகல வஞ்களினின்றும்.
**எங்களை இரட்சித்தருளும் தயவுள்ள கர்த்தாவே**

பஞ்சத்திலும் திடீரென நேரிடும் பேரிடரிலும் நின்றும் வன்முறையிலும் கொலையிலும் எதிர்பாராத மரணத்தினின்றும்
**எங்களை இரட்சித்தருளும் தயவுள்ள கர்த்தாவே**

துக்கப்படும் காலத்திலும் சுகப்படும் காலத்திலும் மரண வேளையிலும் நியாயத் தீர்ப்பு நாளிலும்
**எங்களை இரட்சித்தருளும் தயவுள்ள கர்த்தாவே**

உமது பரிசுத்த மனுஷாவதார இரகசியத்தினிமித்தமும் உமது பிறப்பு பாலியப் பருவம் கீழ்படிதலினிமித்தம் உமது ஞானஸ்நானம் உபவாசம் சோதனைனிமித்தமும்
**எங்களை இரட்சித்தருளும் தயவுள்ள கர்த்தாவே**

வார்த்தையினாலும் செயலினாலும் நீர் ஆற்றிய ஊழியத்தினிமித்தமும் வல்லமையால் நீர் ஆற்றிய உமது மகத்துவமான செயல்களினிமித்தமும் தேவனுடைய இராஜ்ஜியத்தைப் பற்றிய உமது போதனையினிமித்தமும்.
**எங்களை இரட்சித்தருளும் தயவுள்ள கர்த்தாவே**

உமது மன வேதனை விசாரனையினிமித்தமும் உமது சிலுவை பாடுகளினிமித்தமும் உமது அருமையான மரணத்தினிமித்தமும் நீர் அடக்கம் பண்ணப்பட்டதினிமித்தமும்.
**எங்களை இரட்சித்தருளும் தயவுள்ள கர்த்தாவே**

வல்லமையோடு நீர் உயிர்த்தெழுந்ததினிமித்தமும் மகிமையோடே நீர் பரமண்டலத்திற்கு ஏறியதினிமித்தமும் பரிசுத்த ஆவியை நீர் அனுப்பினதினிமித்தமும்.
**எங்களை இரட்சித்தருளும் தயவுள்ள கர்த்தாவே**

3.
எங்கள் ஆண்டவராகிய கடவுளே எங்கள் ஜெபங்களைக் கேட்டருள வேண்டும் என்று
**நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதை கேட்டருளும் தயவுள்ள கர்த்தாவே**

உமது பரிசுத்த சபையை ஆண்டு வழிநடத்தி அன்பினாலும் உண்மையினாலும் அதனை நிரப்பி உமது சித்தத்துக்கு இசைந்த ஒற்றுமையை அளித்தருளவேண்டும் என்று
**நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதை கேட்டருளும் தயவுள்ள கர்த்தாவே**

உலகமெங்கும் உமது சுவிஷேசத்தை தைரியமாய் பிரசங்கிக்கவும் சகல தேசத்தாரையும் உமக்கு சீஷர்களாக்க எங்களுக்குக் கிருபை செய்தருள வேண்டும் என்று
**நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதை கேட்டருளும் தயவுள்ள கர்த்தாவே**

உமது ஊழியக்காரர் தங்கள் போதகங்களினால் உமது சத்திய வசனத்தைப் பிரசித்தம் செய்ய அவர்களை மெய்யறிவாகிய ஞானத்தால் ஒளியூட்டியருள வேண்டும் என்று
**நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதை கேட்டருளும் தயவுள்ள கர்த்தாவே**

உமது ஜனங்கள் உமது வசனத்தைக் கேட்டு உட்கொண்டு ஆவியின் கனிகளைக் கொடுக்கும்படி கிருபைபுரிந்தருள வேண்டும் என்று

**நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதை கேட்டருளும் தயவுள்ள கர்த்தாவே**

வழிதப்பி மோசம் போன யாவரையும் சத்திய வழியில் திருப்பியருள வேண்டும் என்று
**நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதை கேட்டருளும் தயவுள்ள கர்த்தாவே**
நிற்கிறவர்களைப் பலப் படுத்தி மன ஊக்கமில்லாதவர்களைத் தேற்றி ஆதரித்து விழுந்தவர்களைக் கை தூக்கி கடைசியில் சாத்தனை எங்கள் கால்களின்கீழே நசுக்கிப் போட்டருள வேண்டும் என்று
**நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதை கேட்டருளும் தயவுள்ள கர்த்தாவே**

4.
எல்லா தேசங்களின் தலைவர்களையும் நியாயமும் சமாதானமுமான வழிகளில் நடத்தியருள வேண்டும் என்று
**நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதை கேட்டருளும் தயவுள்ள கர்த்தாவே**

எங்கள் யாங் டி பெர்துவான் அகோங் அவர்களையும் பிரதம மந்திரியையும் சுல்தான்களையும் மாகாண கவனர்களையும் ஆசீர்வதித்து உமது பரம ஞானத்தால் அவர்களை வழிநடத்தியருள வேண்டும் என்று
**நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதை கேட்டருளும் தயவுள்ள கர்த்தாவே**

சிறந்த உறுதியான அஸ்திபாரங்களின் மேல் அமையும் பிரயத்தனங்களால் எல்லாக் காரியங்களும் ஒழுங்காய் வகுக்கப்பட்டு நிலை பெற்றோங்கும்படி பாராளுமன்றத்தையும் அதன் வேலையையும் வழிநடத்தியருள வேண்டும் என்று
**நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதை கேட்டருளும் தயவுள்ள கர்த்தாவே**

சட்டத்தைப் பரிபாலனம் பண்ணுகிறவர்கள் நியாயத்தையும் நீதியையும் உண்மையையும் நிலைநாட்ட அவர்களை ஆசீர்வதித்தருள வேண்டும் என்று
**நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதை கேட்டருளும் தயவுள்ள கர்த்தாவே**

பூமியின் பலன்களை உமது நாம மகிமைக்காகவும் சகல மனிதர்களின் உபயோகத்திற்காகவும் பயன்படுத்த எங்களுக்குக் கற்பித்தருள வேண்டும் என்று
**நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதை கேட்டருளும் தயவுள்ள கர்த்தாவே**

உம்முடைய ஜனங்கள் எல்லாரையும் ஆசீர்வதித்து காப்பாற்றியருள வேண்டும் என்று
**நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதை கேட்டருளும் தயவுள்ள கர்த்தாவே**

5.
தனிமையில் வாடுபவர்களுக்கும் தங்களுடைய அருமையானவர்களை இழந்து வருந்துபவர்களுக்கும் ஒடுக்கப்பட்டவர்களுக்கும் உதவியும் ஆறுதலும் தந்தருள வேண்டும் என்று
**நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதை கேட்டருளும் தயவுள்ள கர்த்தாவே**

யாத்திரை பண்ணுகிறவர்களையும் ஆபத்தான நிலையில் உள்ள அனைவரையும் உமது பாதுகாப்பில் வைத்தருள வேண்டும் என்று
**நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதை கேட்டருளும் தயவுள்ள கர்த்தாவே**

சரீரத்திலும் மனதிலும் வியாதிபட்டவர்களைச் சுகமாக்கி வீடற்றவர்களையும் பசியால் வாடுபவர்களையும் கைவிடப்பட்டவர்களையும் ஆதரித்தருள வேண்டும் என்று
**நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதை கேட்டருளும் தயவுள்ள கர்த்தாவே**

காவலில் அடைக்கப்பட்டவர்களுக்கும் நாடிழந்து அகதிகளாய் இருக்கிறவர்களுக்கும் துன்பப் படுகிற யாவருக்கும் இரக்கம் செய்தருள வேண்டும் என்று
**நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதை கேட்டருளும் தயவுள்ள கர்த்தாவே**

எங்களைப் பகைக்கிறவர்களையும் துன்பப்படுத்துகிறவர்களையும் அவதூறு பண்ணு கிறவர்களையும் மன்னித்து அவர்கள் இருதயத்தைத் திருப்பியருள வேண்டும் என்று
**நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதை கேட்டருளும் தயவுள்ள கர்த்தாவே**

கிறிஸ்துவுக்குள் சமாதானத்துடன் இளைப்பாறுதல் அடைந்திருக்கிற இரு சாராராகிய தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டவர்களையும் விசுவாச முடையவர்களாய் இருந்தார்கள் என உமக்கு மட்டும் தெரிந்தவர்களையும் நாங்கள் உம்முன் நினைவு கூறுகிறோம். எங்கள் ஜெபத்தை நீர் கேட்டு நாங்களும் உமது பரம இராஜ்ஜியத்தில் பங்குள்ளவர்களாகும்படி கிருபை புரிந்தருள வேண்டும் என்று
**நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதை கேட்டருளும் தயவுள்ள கர்த்தாவே .**

6.
எங்களுக்கு மெய்யான மனந்திரும்புதலைத் தந்து அஜாக்கிரதையினாலும் அறியாமையினாலும் துணிவினாலும் செய்த எங்கள் பாவங்களையெல்லாம் மன்னித்து உமது பரிசுத்த வசனத்தின் படி எங்கள் நடக்கையை சீர்படுத்துகிறதற்கு உமது பரிசுத்த ஆவியின் கிருபையை அருளிச் செய்தருளும்.

**பரிசுத்த கடவுளே**

**பரிசுத்தமும் வல்லமையுமானவரே**
**பரிசுத்தமும் நித்தியமுமானவரே**
**எங்களுக்கு இரங்கும்.**

### 10. பாவ அறிக்கை — எல்லாரும்

**சர்வ வல்லமையுள்ள கடவுளே எங்கள் பரமபிதாவே உமக்கு விரோதமாகவும் எங்கள் அயலாருக்கு விரோதமாகவும் நினைவினாலும் வார்த்தையினாலும் செயலினாலும் தீமையானவைகளை செய்ததினாலும் நலமானவைகளை செய்யாததினாலும் அறியாமையினாலும் பலவீனத்தினாலும் எங்களுடைய துணிவினாலும் பாவஞ்செய்தோம்.எங்களுடைய எல்லா பாவங்களுக்காகவும் மெய்யாய் மனஸ்தாபப்பட்டு மனந்திரும்புகிறோம். ( மௌனம்)எங்களுக்காக மரித்த உம்முடைய குமாரன் இயேசு கிறிஸ்துவின் மூலம் எங்களுடைய கடந்தகால பாவத்தை மன்னித்து உம்முடைய நாம மகிமைக்காக நாங்கள் புதுவாழ்க்கையுடன் உம்மைச் சேவிக்க அனுக்கிரகித்தருளும். ஆமென்.**

### 11. பாவ நிவிர்த்தி

தம்மிடத்தில் உண்மையாய் மனந்திரும்புகிற யாவரையும் மன்னிக்கிற சர்வவல்லமையுள்ள கடவுள் நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலம் நமக்கு இரங்கி நம் பாவங்கள் எல்லாவற்றையும் மன்னித்து அவைகளினின்று நம்மை விடுதலையாக்கி சகல நன்மைகளிலும் நம்மை நிலைநிறுத்தி நம்மை நித்திய ஜீவக்கரையில் சேர்ப்பாராக. ஆமென்.

### 12. சமாதானம்

விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம்.ஆண்டவருடைய சமாதானம் உங்களோடு எப்பொழுதும் இருப்பதாக.
**எல்லாரும் : உம்மோடும் இருப்பதாக.**

**13. கீர்த்தனை பாடல் :** காணிக்கை சேகரிககப்படும்.

***காணிக்கை ஜெபம்***:

*எல்லாரும்: கர்த்தாவே, மாட்சிமையும் வல்லமையும், மகிமையும் ஜெயமும் மகத்துவமும் உம்முடையவைகள்; வானத்திலும் பூமியிலும் உள்ளவைகளெல்லாம் உம்முடையவைகள்; எல்லாம் உம்மால் உண்டானது; உமது கரத்திலே வாங்கி உமக்குக் கொடுக்கிறோம்.*

### 15.கர்த்தருடைய ஜெபம்

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக உம்முடைய இராஜ்ஜியம் வருவதாக உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறது போல பூமியிலேயும் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்று தாரும். எங்களுக்கு விரோதமாய் குற்றஞ்செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிக்கிறது போல எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும்.எங்களை சோதனைக்குள் பிரவேசிக்கப்பண்ணாமல் தீமையினின்று எங்களை இரட்சித்துக் கொள்ளும். இராஜ்ஜியமும் வல்லமையும் மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே. ஆமென்.

**16. ஆசீர்வாதம் :** எழுந்து நின்று சிலுவையை நோக்கி மறுமொழியை ஏறெடுப்போமாக.

*தலைவர்*: நமது எல்லாப் பிரச்சனைகளையும்
சபை : கிறிஸ்துவின் சிலுவையிடம் நாம் சமர்ப்பிப்போம்

*தலைவர்*: நமது எல்லா கஷ்டங்களையும்
சபை : கிறிஸ்துவின் சிலுவையிடம் நாம் சமர்ப்பிப்போம்

*தலைவர்*: சாத்தானின் எல்லா செய்கைகளையும்
சபை : கிறிஸ்துவின் சிலுவையிடம் நாம் சமர்ப்பிப்போம்

*தலைவர்*: நமது எல்லா நம்பிக்கைகளையும்
சபை : உயிர்த்தெழுந்த தேவனிடம் நாம் சமர்ப்பிப்போம்.

***அறிவிப்புகள்***

***ஸ்தோத்திர* பாடல் / கீர்த்தனை**

***ஸ்தோத்திர ஜெபம்***

***அமைதியாக கடந்துச் செல்லவும்***

## THE PREPARATION

The Lord be with you
**And also be with you**

Jesus is in the wilderness – Fasting, praying and seeking the will of the Father
**Lord, we come with You, keep us with You.**

The sacrifice of God is a broken spirit: a broken and contrite heart you will not despise.Psalm51:17
**Have mercy on us, O Lord, for we have sinned**

Compassion and forgiveness belong to the Lord our God, though we have rebelled against Him. Daniel 9: 9
**Have mercy on us, O Lord, for we have sinned**

I will arise and go to my father, and I will say to him, 'Father, I have sinned against heaven and before you; I am no longer worthy to be called your son.' Luke 15.
**Have mercy on us, O Lord, for we have sinned**

3. Let us Pray ( Kneel )

**Almighty God, to whom all hearts are open, all desires known, and from whom no secrets are hidden; Cleanse the thoughts of our hearts by the inspiration of Your Holy Spirit, that we may perfectly love You and worthily magnify Your holy name; through Christ our Lord. Amen.**

**4. THE COMMANDMENTS**

M: Our Lord Jesus Christ said, if you love Me keep my commandments: happy are those who hear the Word of God and keep it. Hear then these commandments which God has given to His people, and take them to heart.
I am the Lord your God: you shall have no other gods but Me. You shall love the Lord your God with all your heart, with all your soul, with all your mind and with all your strength.
**All: Amen. Lord, have mercy.**

M: You shall not make for yourself any idol, God is spirit, and those who worship Him must worship in spirit and in truth.
**All: Amen. Lord, have mercy.**

M: You shall not dishonour the name of the Lord your God. You shall worship Him in reverence and awe.
**All: Amen. Lord, have mercy.**

M: Remember the Lord's day and keep it holy. Christ is risen from the dead; set your minds on things that are above. Not on things that on the earth.
**All: Amen. Lord, have mercy.**

M: Honour your father and mother. Live as servants of God: honour all men; love the brotherhood.
**All: Amen. Lord, have mercy.**

M: You shall not commit murder. Do not nurse anger against your brother; overcome evil with good.
**All: Amen. Lord, have mercy.**

M; You shall not commit adultery. Know that your body is a temple of the Holy Spirit.
**All: Amen. Lord, have mercy.**

M: You shall not steal. You shall work honestly and give to those in need.

**All: Amen. Lord, have mercy.**

M: You shall not bear false witness. Let everyone speak the truth.
**All: Amen. Lord, have mercy.**

M: You shall not covet anything which belongs to your neighbour. Remember the words of our Lord Jesus. It is more blessed to give that to receive. Love your neighbour as yourself, for lovfe is the fulfilling of the law.
**All: Amen. Lord, have mercy.**

**Lord have mercy upon us x3**
**Christ have mercy upon us x3**
**Lord have mercy upon us x3**

**5. PRAYER FOR LENT**

**Almighty and everlasting God You hate nothing that You have made and forgive the sins if all those who are penitent. Create and make in us new and contrite hearts, that lamenting our sins and acknowledging our wretchedness, we may receive from You, the God of mercy, perfect forgiveness and peace: through Jesus Christ our Lord who is alive and regins with You and the Holy Spirit, one God, now and forever. Amen.**

**6. PRAYER FOR THE WEEK ( COLLECT—see page 18-19)**

**7. MINISTRY OF WORD**

Bible Reading

Sermon

**8. APOSTLE CREED**

**I believe in God, the Father almighty, Creator of heaven and earth.I believe in Jesus Christ, his only Son, our Lord. He was conceived by the power of the Holy Spirit and born of the virgin Mary. He suffered under Pontius Pilate, was crucified, died, and was buried. He descended to the dead. On the third day he rose again. He ascended into heaven,and is seated at the right hand of the Father. He will come again to judge the living and the dead. I believe in the Holy Spirit, the holy catholic Church, the communion of the saints, the forgiveness of sins, the resurrection of the body, and the life everlasting. Amen**

**9. THE GREAT LITANY**

Let us pray.
I.
God our Father
**Have mercy on us**

God the Son
**Have mercy on us**

God the Holy Spirit

**Have mercy on us**

Holy, blessed and glorious Trinity
**Have mercy on us**

**II**
From all eveil and mischief: from pride, vanity and hypocrisy: from envy, hatred and malice: and from all ill will,
**Good Lord, deliver us.**

From sloth, worldiness, and love of money: from hardness of heart and contempt for Your words and Your laws,
**Good Lord, deliver us.**

From sins of body and mind: from the deceits of the world, the flesh and the devil,
**Good Lord, deliver us.**

From famine and disaster: from violence, murder and dying unprepared,
**Good Lord, deliver us.**

In all times of sorrow: in all times of joy: in the hour of death, and the day of judgement,
**Good Lord, deliver us.**

By the mystery of Your holy incarnation: by Your birth, childhood and obedience: by Your baptism, fasting and temptation,
**Good Lord, deliver us.**

By Your ministry and in word and work: by Your mighty acts of power: and by preaching of Your kingdom,
**Good Lord, deliver us.**

By Your agony and trial: by Your cross and passion: and by Your precious death and burial,
**Good Lord, deliver us.**

By Your mighty resurrection: and Your glorious ascension: and by Your sending of Holy Spirit.
**Good Lord, deliver us.**

III
Hear our prayers, O Lord our God:
**Hear us good Lord.**

Govern and direct Your holy Church: fill it with love and truth: and grant it that unity which is Your will:
**Hear us good Lord.**

Give us the boldness to preach the gospel in all the world, and to make disciples of all the nations:
**Hear us good Lord.**

Enlighten Your ministers with knowledge and understanding, hat by their teaching and their lives they may proclaim Your word:
**Hear us good Lord.**

Give Your people grace to hear and receive Your word, and to bring forth the fruit of the Spirit:
**Hear us good Lord.**

Bring into the way of the truth all who have erred and are deceived:
**Hear us good Lord.**

Strengthen those who stand : comfort and help the fainthearted: raise up the fallen: and finally beat down satan under or feet:

**Hear us good Lord.**

IV
Guide the leaders if the nations into the ways of peace and justice:
**Hear us good Lord.**

Bless the Yand Dipertuan Agong, the Prime Minister, the Sultans and the Governors of the States and to guide them with Thy heavenly wisdom:
**Hear us good Lord.**

Direct and prosper the work of Parliament, taht all things may be ordered and settled by their endeavours on the best and surest foundations:
**Hear us good Lord.**

Bless those who administer the law, that they may uphold justice, honesty and truth:
**Hear us good Lord.**

Teach us to use the fruits of the earth to Your glory, and for the good of all mankind:
**Hear us good Lord.**

Bless and keep all Your people:
**Hear us good Lord.**

V
Help and comfort the lonely, bereaved, and the oppressed:
**Lord, have mercy.**

Keep in safety those who travel, and all who are in danger:
**Lord, have mercy.**

Heal the sick in body and mind, and provide for the homeless, the hungry and the destitute:
**Lord, have mercy.**

Show Your pity on prisoners and fefugees, and all who are in trouble:
**Lord, have mercy.**

Forgive our enemies and persecutors, and slanderers, and turn their hearts:
**Lord, have mercy.**

Hear us as we remember those who died in the peace of Christ, and those whose faith is nown to You alone, and grant us with them a share in Your eternal kingdom:
**Lord, have mercy.**

VI
Give us true repentance: forgive us our sins of negligence and ignorance, and our deliberate sins: and grant us the grace of Your Holy Spirit to amend our lives according to Your holy word:
**Lord, have mercy.**
**Holy God, holy and strong, holy and immortal, have mercy upon us.**

**10. THE CONFESSION**

**Father eternal, Giver of life and grace, we have sinned against You and against our neighbour, in what we have thought, in what we have said and done, through ignorance, through weakness, through our won deliberate fault. We have wounded Your love and marred Your image in us. We are sorry and ashamed and repent of all our sins.** *(Pause)* **For the**

**sake of Your Son Jesus Christ, who died for us, forgive us all that is past and lead us out from darkness to walk as children of light. Amen.**

**11. ABSOLUTION**

Almighty God, our heavenly Father who in His great mercy has promised forgiveness of sins to all those who with heartfelt repentance and true faith turn to Him. Have mercy on us; pardon and deliver us from all our sins; confirm and strengthen us in all goodness; and bring us to everlasting life; through Jesus Christ our Lord. Amen.

**12. PEACE**

Being justified by faith, we have peace with God through our Lord Jesus Christ.

The peace of the Lord be always with you
**All: And also be with you.**

**13. OFFERING- Hymn**

**Offertory Prayer:**

Yours, Lord, is the greatness, the power, the glory, the splendour, and the majesty; for everything on heaven and on earth is yours. All things come from you, and of your own do we give you. Amen.

**15. THE LORD'S PRAYER**

**Our Father in heaven, hallowed be Your name, Your kingdom come, Your will be done, on earth as inn heaven. Give us today our daily bread. Forgive us our sins as we forgive those who sin against us. Lead us not into temptation but deliver us from evil. For the kingdom, the power and the glory are Yours now and forever. Amen.**

**16. THE BLESSING** *(Stand and point to the Cross as the responses are said)*

M: All our problems
**P: We send to the cross of Christ.**

M: All our difficulties
**P: We send to the cross of Christ.**

M: All the devil's work
**P: We send to the cross of Christ.**

M: All our hopes
**P: We set on the risen Lord.**

**Announcements**

**Hymn / Keerthanai**

**Thanksgiving Prayer**

**Depart in peace**

***சுருக்க ஜெபம்***

### லெந்து காலத்தில் முதலாம் ஞாயிறு Lent 1

*எல்லாம் வல்ல கடவுளே, உமது திருக்குமாரனாகிய இயேசு கிறிஸ்து வனாந்தரத்தில் நாற்பது நாட்களாய் உபவாசித்து, எங்களைப்போல சோதிக்கப்பட்டும், பாவஞ்செய்யாமல் இருந்தாரே. உமது ஆவிக்குக் கீழப்படியத் தக்கதாக எங்கள் வாழ்க்கையை நாங்கள் ஒழுங்குபண்ணி, நீர் எங்கள் பலவீனத்தை அறிவதுபோல, இரட்சிக்கும் உமது வல்லமையை நாங்கள் அறியவும் கிருபை தந்தருள வேண்டும் என்று எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை முன்னிட்டு வேண்டிக் கொள்ளுகிறோம். ஆமென்.*

Almighty God, whose Son Jesus Christ fasted forty days in the wilderness, and was tempted as we are, yet without sin: give us grace to discipline ourselves in obedience to your Spirit; and, as you know our weakness, so may we know your power to save; through Jesus Christ our Lord. Amen.

### லெந்து காலத்தில் 2ம் ஞாயிறு Lent 2

*ஆண்டவரே, உலகத்தினாலும் மாம்சத்தினாலும் பிசாசினாலும் நேரிடும் சோதனைகளுக்கு எதிர்த்து நிற்கவும், சுத்த இருதயத்தோடும் சுத்த மனதோடும் ஒரே தேவனாகிய உம்மைப் பின்பற்றி நடக்கவும், உம்முடைய ஜனமாகிய எங்களுக்குக் கிருபை தந்தருள வேண்டுமென்று, எங்கள் ஜனமாகிய எங்களுக்குக் கிருபை தந்தருள வேண்டுமென்று, எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்,*

Lord God Almighty, grant your people grace to withstand the temptations of the world, the flesh and the devil, and with pure hearts and minds to follow you, the only God; through Jesus Christ our Lord. Amen.

### லெந்து காலத்தில் 3ம் ஞாயிறு Lent 3

*எல்லாம் வல்ல கடவுளே, உமது மிகுந்த அன்புள்ள குமாரன் மகிழவடையுமுன், முதலில் பாடுபட்டு, மகிமையினுள் பிரவேசிக்கும் சிலுவையின் மரணத்தை உத்தரித்தாரே. நாங்கள் சிலுவையின் பாதையில் நடந்து, அது ஜீவனுக்கும் சமாதானத்திற்கும் வழி என்பதைக் கண்டு கொள்ள இரக்கமாய்க் கிருபை செய்தருள வேண்டுமென்று எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை முன்னிட்டு வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.*

Almighty God, whose most dear Son went not up to joy but first he suffered pain, and entered not into glory before he was crucified; mercifully grant that we, walking in the way of the cross, may find it none other than the way of life and peace; through Jesus Christ our Lord. Amen.

### லெந்து காலத்தில் 4ம் ஞாயிறு Lent 4

*எல்லாம் வல்ல பிதாவே, உமது திருக்குமாரன் சிலுவையில் மரணத்தை உத்தரிக்குமுன் அவருடைய மகிமையில் வெளிப்படுத்தப்பட சித்தங் கொண்டீரே, நாங்கள் அவரோடே கூட பாடு அனுபவிக்க பலப்படுத்தப்பட்டவர்களாய் மகிமையின் மேல் மகிமையடைந்து, அவருடைய சாயலில் மறுரூபமாகத்தக்கதாக அவருடைய மகிமையை உணர்ந்து கொள்ள எங்களுக்கு விசுவாசத்தை அருள வேண்டுமென்று உம்மோடும் பரிசுத்த ஆவியோடும் ஒரே கடவுளாக இப்பொழுதும் எப்பொழுதும் ஜீவித்து அரசாளுகிற அவரை முன்னிட்டு வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.*

Almighty Father, whose Son was revealed in majesty before he suffered death upon the cross; give us faith to perceive his glory, that we may be strenghthened to suffer with him and be changed into his likeness, from glory to glory; who is alive and reigns with you and the Holy Spirit one God, now and for ever. Amen.

### லெந்து காலத்தில் 5ம் ஞாயிறு Lent 5

*மிகவும் இரக்கம் நிறைந்த கடவுளே, உமது திருக்குமாரன் இயேசு கிறிஸ்துவின் மரணத்தின் மூலமாயும் உயிர்த்தெழுதலின் மூலமாயும் மானிடரை இரட்சித்து, விடுதலை பண்ணினீரே, சிலுவையில் பாடு அனுபவித்த அவர் மேலுள்ள விசுவாசத்தின் மூலமாய் நாங்கள் அவருடைய வெற்றியின் வல்லமையினால் வெற்றிபெற கிருபை அருள வேண்டும் என்று எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை முன்னிட்டு வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.*

Almighty and everlasting God, you hate nothing that you have made and forgive the sins of all those who are penitent. Create and make in us new and contrite hearts, that, lamenting our sins and acknowledging our wretchedness, we may receive from you, the God of all mercy, perfect forgiveness and peace; through Jesus Christ our Lord. Amen

### குருத்தோலை ஞாயிறு Palm Sunday

*சர்வ வல்லமையுள்ள நித்திய தேவனே, மனிதரிடத்தில் உருக்கமாய் அன்பு கூர்ந்த தயவுள்ள பிதாவே, உமது குமாரனும் எங்கள் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்து காட்டிய மகா தாழ்மையை எல்லா மனிதரும் பின்பற்றும்படி அவர் எங்கள் மாம்சதேகத்தைத் தரித்துக்கொள்ளவும் சிலுவையில் மரணத்தை உத்தரிக்கவும் அவரை அனுப்பினீரே. அவர் காட்டிய பொறுமையை நாங்கள் பின்பற்றி நடக்கவும், அவருடைய உயிர்த்தெழுதலில் பங்குள்ளவர்களாகவும், எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் கிருபை செய்தருளும். ஆமென்*

Almighty and everlasting God, who in your tender love towards mankind sent your Son our Saviour Jesus Christ to take upon him our flesh and to suffer death upon the cross: grant that we may follow the example of his patience and humility, and also be made partakers of his resurrection; through Jesus Christ our Lord. Amen.


12

**லெந்து கால ஆராதனை முறைமை**

ORDER OF SERVICE FOR SEASON OF LENT

2022